பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

தரமான சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

இம்போட்டற்
நைலெக்ஸ்சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஞூ கார்த்திகை மீ 26 உ. ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ அவ்வல் பிறை 1 ( 11 - 12 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 14

வன்செயல்கள் அதிகரிப்பு

# தெற்கில் 27 பேர் ஒரே நாளில் பலி!

## வலப்பனையில் 9 பேர் உயிரிழந்தனர்

கொழும்பு, டிசம்பர் 11

கண்டி மாவட்டத்தில் வலப்பனை என்னுமிடத்தில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் ஒன்றில் 9 பேர் கொல்லப்பட்டனர். இரண்டு பேர் காயம் அடைந்தனர்.

இதனிடையில் கடந்த 24 மணித்தியாலங்களில் 27 பேர் தென் பகுதியில் வன்செயல்களினுல் உயிரிழந்தனர் என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

லலப்பனையில் வீடு ஒன்றில் சீட்டு விளையாடிக்கொண்டிருந்தவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 8 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று பி.பி.சி அறிவித்தது.

இந்திய வானெலி தனது செய்தியறிக்கையில் குண்டு ஒன்று வீசப்பட்டதில் 9 அரசு ஆதரவாளர்கள் உயிரிழந்தனர் என்று தெரிவித்தது.

நேற்று மாத்தறை மாவட்டத்தில் 12 பேரின் சடலங்கள் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன.

இவை ஜே. வி. பி இயக்க ஆதரவாளர்களுடையவை என்று ஏஜன்ஸி செய்திகள் தெரிவித்தன.

மொனருகலையில் தம்பகல்ல தோட்டத்தில் நான்கு பேர் இனந்தெரியாத நபர்களினுல் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மொனருகல மகாநம மகாவித்தியாலய அதிபர் பி டி. சிறிவர்த்தன நேற்று முன்தினம் மாலை சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர்களினுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குருணுகலையில் ஒரு யு.என் பி. ஆதரவாளர் கொல்லப்பட்டார்.

அம்பாந்தோட்டையில் இராணுவஜீப் ஒன்று நிலக்கண்ணி வெடியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தண்டனை தவிர்ப்பு சட்டம்; ரத்துச் செய்ய சிறிமா குரல்

கொழும்பு, டிச 11

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தண்டனை தவிர்ப்புச் சட்டத்தை ரத்துச் செய்யும்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணி குரல் எழுப்பியிருக்கிறது.

ஆயுதப் படையினர் இழைத்த சில தவறுகளுக்குத் தண்டனை வழங்காமல் அவர்களைப் பாதுகாக்கும் விதமாக அரசாங்கம் இந்தச் சட்டத்தை அண்மையில் கொண்டுவந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-ஐ)

## கோல்ட் ஸ்டோர்ஸை அரசு சுவீகரித்தது!

இலங்கை கோல்ட் ஸ்ரோர்ஸ் லிமிட்டெட் கம்பனியை அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அரசு நேற்று சுவீகரித்தது

இந்தக் கம்பனியில் நீண்ட காலமாக நிலவி வரும் தொழில் தகராறுகளுக்கு தீர்வு காணவே அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கம்பனியில் ஆயிரத்து 300 பேர் பணியாற்றுகின்றனர். (ஒ-எ)

யாழ். பல்கலைக்கழக விவகாரம்:

## சுமுகமாகத் தீர்க்க ஆசிரியர் சங்கத்தினர் சமரச நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச 11

யாழ் பல்கலைக் கழக மாணவர்களுக்கும் ஊழியர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள பிணக்கைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதில் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது

இதுதொடர்பாக ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நமது பல்கலைக்கழகத்தில் இப்போது சிலவிரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன என்பதை மிகுந்த வருத்தத்துடன் அவதானித்துக்கொண்ட யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழகத்தை இந்த நெருக்கடி நிலையிலிருந்து விடுவித்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

திருமலைக்கு எரிபொருள் ஏற்றிச்சென்ற

## சரக்கு ரயில் நேற்று தடம் புரண்டது

கொழும்பு டிச 11

திருகோணமலைக்கு எரிபொருள், உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற சரக்கு ரயில் ஒன்று நேற்றுக்காலை 8 மணியளவில் மொரகொல்லகமவுக்கும் கலாவேவவுக்கும் இடையில் தடம்புரண்டது.

இரண்டு என்ஜின்களும் எண்ணைத் தாங்கிகள் இரண்டும் தடம் புரண்டன.

தண்டவாளத்தில் பொருத்தப்பட்டிருந்த பின் பிளேட்டுக்கள் கழற்றப்பட்டிருந்ததன் காரணமாகவே ரயில் தடம் புரண்டது என்று ரயில்வே அதிகாரி ஒருவர் சொன்னுர்.

கொழும்பிலுள்ள

## மத்திய தந்தி அலுவலகத்தில் நேற்றுக் குண்டு வெடிப்பு!

கொழும்பு, டிச 11

கொழும்பிலுள்ள மத்திய தந்தி அலுவலகத்தில் (C T O) நேற்றுக் காலை குண்டு ஒன்று வெடித்தது.

இந்தச் சம்பவத்தின் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

எனினும் கட்டடத்தின் சிலபகுதிகள் சேதமடைந்ததாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை சுமார் 8-15 மணிக்கு இந்தக் குண்டு வெடித்தது. இதனை அடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டது.

## ரஷ்யர்களைக் காப்பாற்ற அமெரிக்க நாய்கள்!

மாஸ்கோ டிச 11

ஆர்மேனியா பூமி அதிர்ச்சியில் அகப்பட்டு இடிபாடுகளுக்கிடையில் சிக்கி உள்ளவர்களை மோப்பம் பிடித்துக் காப்பாற்ற, பயிற்சி பெற்ற நாய்களை அமெரிக்க அரசு அங்கு அனுப்பி வைத்துள்ளது.

அதேவேளை — உலக நாடுகளின் உதவிகள் ஆர்மேனியாவில் குவிந்த வண்ணம் உள்ளன.

இதனிடையில் சோவியத்ஜனுதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் பூகம்பத்தினுல் பாதிக்கப்பட்ட ஆர்மேனியாவில் மாநிலத்துக்கு விஜயம் செய்தார்.

சோவியத் யூனியன் முழுவதும் உயிரிழந்தோருக்காக ஒரு நாள் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. (ஒ-எ)

முச்சந்தி முரளி



அப்ப ரிசேர்வுக்கு ஒரு ரிசேர்வ் எண்டு சொல்லுங்கோ!

## மத்தியகல்லூரி மைதானத்தில் இன்று பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிச 11

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை முன்னணியின் யாழ். பிராந்திய பிரிவு கவனித்து வருகிறது. யாழ். பிராந்திய பிரிவுத் தலைவர் திரு கே. பிறேமச்சந்திரன் கூட்டத்துக்கு தலைமை வகிப்பார்.

முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. வே பத்மநாபா வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு. அ. வரதராஜப் பெருமாள், அமைச்சர்கள் திரு பெ. கிருபாகரன், ஜனுப் அபு யூசுப் மற்றும் திரு. கே. சுப்பையா, கே ரவீந்திரன், திரு. ப. ஜீவரத்தினம் ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றுவர். (உ-10)

## பொலீஸாருக்கு உதவ தற்காலிக றிசேவ் படை!

கொழும்பு டிச 11

ஜனுதிபதித் தேர்தலின் போது பொலீஸாருக்கு உதவத்தற்காலிக ரிசேர்வ் பொலீஸ் திரட்டப்படவுள்ளன.

எதிர்வரும் வியாழன் இந்த வேலை ஆரம்பமாகும்.

—இப்படித் திரட்டப்படுவோர் தற்காலிக ரிசேர்வ் பொலீஸ் என்று அழைக்கப்பட்டாலும், சீருடையின்றிப் பொலிஸாருக்கான 'பாட்ஜ்' மட்டுமே குத்தியிருப்பர் என்று தெரிகிறது. (உ-எ)

## சிறுவன் பலி!

யாழ்ப்பாணம், டிச, 11

உரும்பராயில் லொறியுடன் விபத்துக்குள்ளாகி சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

நேற்று முன்தினம் உரும்பராய்ச் சந்தியில் நடைபெற்ற இச் சம்பவத்தில் அற்புதநாதன் மயூரன் (வயது8) என்ற சிறுவனே பலியானுன். (ஒ-10)

மற்றைய குழுக்களினுல் கொல்லப்பட்ட

## 30 தீவிரவாதிகளின் சடலங்கள் வீதியில்

கொழும்பு, டிச. 11

தென் இலங்கையில் இயங்கும் மக்கள் புரட்சிகர செம்படை, பச்சைப் புலிகள் குழுக்களினுல் கடந்த ஒருவார காலத்தில் இன்னெரு தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 30பேர் கொல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்களின் சடலங்கள் வீதி ஓரங்களிலும் பஸ் தரிப்பு நிலையங்களிலும் கடற்கரையோரங்களி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

ஞாயிற்றுக்கிழமை
சுப நேரம்:
9.20 முதல் 10 50 வரை
ராகு காலம்:
4.50முதல் 6 20வரை
சுப்பிரமணிய
பாரதியார் ஜெயந்தி

# கொள்ளைகளைத் தடுப்பதற்கு ஊரடங்கு தளர்த்தப்படும்

## நடவடிக்கை எடுப்பதாக மாகாண முதல்வர் பேட்டி

திருகோணமலை, டிச 11

வடக்கில் தற்போது அமுல் செய்பப்பட்டு வரும் ஊரடங்கைத் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். தற்போது பரவலாக நடைபெற்றுவரும் கொள்ளைகளைத் தடுப்பதற்கு இது ஓரளவு உதவியாக இருக்கும்.

வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் முதலமைச்சர் திரு வரதராஜப்பெருமாள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று திருகோணமலை நகரமண்டபத்தில் அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டபின்னர் இடம்பெற்ற மதியபோசன வைபவத்தில்முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் செயலாளர் நாயகம் திரு. பத்மநாபா மற்றும் அமைச்சர்கள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளிலிருந்து சமூகம் அளித்த பிரமுகர்கள், இந்திய அமைதிப் படையின்முத்தஅதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின் போது தமது செயற்திட்டங்கள் குறித்து திரு, வரதராஜப்பெருமாள் விளக்கமளித்தார்.

தமது நிர்வாகத்தில் தமிழ்மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

பதவிப் பிரமாண வைபவத்தின் பின் அமைச்சர்களின் சம்பிரதாயபூர்வமான கூட்டம் நடைபெற்றது

நேற்றைய வைபவத்தில் உரைஎதுவும்நிகழ்த்தப்படவில்லை.

கூட்ட முடிவில் முதலமைச்சர் திரு அ வரதராஜப்பெருமாள் செய்தியாளரிடம் பேசுகையில்- மின்சாரம், தண்ணீர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு அமைச்சர்களும் நேற்று பதவிப்பிரமாணம்

திருகோணமலை டிச 11

வடக்கு-கிழக்கு இணைந்தமாகாணசபைஅமைச்சர்களாக நேற்று நால்வர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

நேற்றுக்காலை திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவம் மிகவும் எளிமையான முறையில் அமைந்திருந்தது.

ஆளுநர் லெப்டினன்ட் கேர்ணல் நளின் செனவிரத்ன பதவிப்பிரமாண வைபவத்தை நடத்திவைத்தார்.

பதவிப் பிரமாணம் செய்துகொண்ட நான்கு அமைச்சர்களின் பெயர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளும் வருமாறு:-

1. பெரியதம்பி கிருபாகரன் (நிதி, தொழில் துறை அமைச்சர்)
2. தயானந்த ஜெயதிலகா திட்டமிடல் இளைஞர் விவகார அமைச்சர்)
3. ஜனுப் அபு யூசுப் (கைத்தொழில், போக்குவரத்து அமைச்சர்)
4. சி. எம். கணேசலிங்கம் (புனர்வாழ்வு, காணி அபிவிருத்தி விவசாயத்துறை அமைச்சர்)

முதலமைச்சராக திரு. அ. வரதராஜப் பெருமான் நேற்று முன்தினம் கொழும்பில் ஜனுதிபதி திரு. ஜே. ஆர், ஜெயவர்த்தன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டது தெரிந்ததே. உள்ளு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இதுவரை 18 பேர் சத்தியப்பிரமாணம் செய்யவில்லை

திருகோணமலை. டிச, 11

கடந்த 5 ஆம் திகதி இடம் பெற்ற பதவிப் பிரமாண வைபவத்தில் கலந்துகொள்ளாத 17 ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களினதும் ஒரு ஐ. தே. க உறுப்பினரினதும்நிலைமை இன்னும் உத்தியோகபூர்வமாகத் தெளிவுபடுத்தப்படவில்லை.

நேற்று வரை இவர்கள் 18 பேரும் மாகாண சபை உறுப்பினர்களாகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவில்லை. (இ-உ)

நேற்று மாலையில்

## திருநெல்வேலியில் சூடு! ஒருவர் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம். டிச 11

நேற்று மாலை திருநெல்வேலி முடமாவடி, அரசடிப் பகுதிகளில் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இப்பகுதியில் இடம் பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்ததாகவும்- மூவர் காயமடைந்ததாகவும்-

உயிரிழந்தவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் பிராந்தியப் பொறுப்பாளர் மதி என்றும் தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலிப் பகுதியில் நேற்று மாலையில் தொடர்ந்து பதற்றம் நிலவியதால் அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஊர்ஜிதப்படுத்தும் வேறு தகவல் ஏதும் அலுவலகத்துக்குக் கிடைக்கவில்லை. (உ)

## பிரசாரக் கூட்டம் பற்றி ஹெலியிலிருந்து நோட்டீஸ்

குருநகர், டிச. 11

பிரதமர் பிரேமதாஸாவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் சம்பந்தமான நோட்டீஸ்கள் நேற்று யாழ் நகரப்பகுதிகளில் ஹெலிக்கொப்டர் மூலம் வீசப்பட்டன.

நாளை காலை 9 மணிக்கு பிரதமர் பிரேமதாஸா பங்குபற்றும் பொதுக் கூட்டம் ஒன்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. அக் கூட்டம் தொடர்பான துண்டுப் பிரசுரங்களே ஹெலியிலிருந்து வீசப்பட்டன. (உ-51)

## விலகிய கடற்படையினர் மீண்டும் சேவைக்கு அழைப்பு

கொழும்பு, டிச. 11

முன்னுள் கடற்படை வீரர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமான அறிவித்தலை அரசாங்கம் நேற்று விடுத்தது.

தாஞக சேவையை விட்டு விலகிய 55 வயதுக்கு உட்பட்ட கடற்படை வீரர்கள், அருகில் உள்ள படைத்தளத்துக்குச் சென்று பெயர்களைப் பதிவு செய்யும்படி இந்த அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது

ஒழுக்காற்று விசாரணைகளின் பின்னர் விலக்கப்பட்ட வீரர்கள் சேர்க்கப்படமாட்டார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## நேற்றும் பஸ் சேவை வழமைபோல்

யாழ்ப்பாணம், டிச 11

கொழும்பு — யாழ் பஸ்சேவைகள் நேற்றும் வழமை போல் நடைபெற்றன.

பெரும் எண்ணிக்கையான பயணிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்றதையும் அவதானிக்க முடிந்தது. (ஒ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த ஹோட்டல் செற் Show-cas மேசை Baby cot, கட்டில் மெத்தை, கள் கண்ணாடி மேசை. Rice - cooker. Multi-cooker. மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. திரு. மதியாபரணம் இராம லிங்கம் வீதி திருநெல்வேலி கிழக்கு. முடமாவடி. (8092)

நல்ல பாவிப்பிலுள்ள English ஒற்றைக் கதவு பெரிய இரும்புப் பெட்டியும் திண்டிக்கல் ஒற்றைக் கதவு பேபி கேஸ் இரும்புப் பெட்டியும் உடன் விற்பனைக்கு உண்டு யவுனா எலக்ரோ பிளேச்ரோர்ஸ். No 7. கஸ்தூரியார் லேன். யாழ்ப்பாணம் (8080)

5: K V A C, 230 V டீசல் ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு. நா சிவபாலமூர்த்தி, பாதிரி கோவிலடி லேன் கே. கே. எஸ். ரோட். கொக்குவில் (8062)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards). திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார். புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரவு ஆவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம், (C/887)

## வாழ்த்து மடல்கள்

ஏராளமான டிசைன்களில் கிறிஸ்மஸ் புது வருட, பிறந்ததின, திருமண வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கும், கூடுதலாக வாழ்த்துக்கள் தெரிவு செய்வோருக்கும் விஷேட கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (8044)

## கல்வி

G. C. E. O/L) இல் கட்டாய பாடமாகிய கணிதபாடத்தினை புதிய பழைய திட்டத்திற்கமைய 21 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் 2 மாதத்திற்குள் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு வீடுகளில் சென்று கற்பிக்கப்படும். எனது வீட்டிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆறுமுகநாதன். 10 சச்சேரி கிழக்கு ஒழுங்கை. கண்டுகுளி. (8040)

## இறைச்சிக்கோழி விநியோகம்

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)

## நாய்களுக்கான மருந்துகள்

For dogs Pervo Distember Rabies Vaccine Phillips Vetzvme, Tablets Shampoo Flea Powd r Spary மற்றும் நாய்களுக்குத் தேவையான மருந்துகளை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம் Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7687)

## வீடு தேவை

வேம்படி பாளிகைகூட சுற்றுடலில் (1 மைல்) தனி அல்லது பகுதி வீடு வாடகைக்கு உடன் தேவை. 402 Co, உதயன் (8202)

## உடன் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கிறீம் ஹவுஸ் ஸ்தாபனம் ஒன்றிற்கு அனுபவமிக்க வெயிட்டர்கள் உடன் தேவை. தொடர்பு- யாழ் றிக்கோ சுவீற் அன் கிறீம் ஹவுஸ், 352, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (8042)

## ஆங்கில வகுப்புக்கள்

G C E புதிய, பழைய பாடத்திட்டம் துரித மீட்டல் தொடக்கத்திலிருந்து பல்கலைக் கழகத்தரம்வரை தொழிலாளர், ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் போதனாசிரியர் ஆசிரியர் வாசாலை ஆங்கில விரிவுரையாளர். பரீட்சைத் திணைக்கள முன்னாள் ஆங்கிலப் பரீட்சகர். பெண்கள் மட்டும். நேரடித் தொடர்பு: திங்கள், புதன், சனி 3 மணி - 5 மணி வரை சிவாஸ் ஸ்ரூடியோ. பண்டத்தரிப்பு. (8043)

## I. E T.
### கல்வி நிலையம்

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடாத்தப்படும் உகவி ஆங்கில ஆசிரியர் TOEFL தேர்வுப் பரீட்சைக்கான மீட்டல் பயிற்சி 30 மணித்தியாலயங்கள் ரூபா 500/- தனிப்பட்ட பயிற்சி (Individual), வீடுகளில் பயிற்சி (House Visit) 11B Stanley Road. Jaffna விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல்மாடி) (8048)

## மணமகன் தேவை

சுத்தசைவ உயர் குலத்தைச் சேர்ந்த அரசாங்கத்தில் நல்ல பதவியில் இருக்கும் 32 வயதுடைய அழகான பெண்ணுக்கு 38 வயதுக்கு உட்பட்ட அரசாங்க அல்லது தனியார் ஸ்தாபனத்தில் அல்லது வெளிநாட்டில் தொழில் புரியும் நற்பண்புடைய மணமகன் தேவை. சீதனம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்: 403. பே/பா உதயன் யாழ்ப்பாணம் (8204)

## காணவில்லை

எனது சாரதி அனுமதிப்பத்திரம் Driving Licence) அண்மையில மனிப்பாய் வீதி அல்லது கண்டி வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அறியத்தந்தால் தகுந்த சன்மானத்துடன் வந்து பெற்றுக் கொள்வேன் தொடர்பு K செல்லத்துரை (ஆசிரியர்) 56/1. பழைய பூங்கா வீதி யாழ்ப்பாணம் (8095)

## கோழிக்குஞ்சு

### விநியோகம்

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள். சிவப்பு சேவற் குஞ்சுகள், Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Hyline கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7686)

---

J. M. J

# யோர்தான்

யோர்தான் நாட்டில் பண்ணைத் தொழிலாளர்களாகவும் உதவியாளர்களாகவும் FARM WORKERS and GENERAL HELPERS பணியாற்றுவதற்கு உடனடியாக ஒழுங்குகள் செய்து தரப்படும்.

வளமிக்க யோர்தான் நாட்டில் சிறந்த சம்பளத்துடன் பணிபுரிய

## அரியதோர் சந்தர்ப்பம் இது.

முதற்குழுவில் இருபது பேர் அடுத்த இருவாரங்களுக்கிடையில் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

சம்பளம்

600 - 800 அமெரிக்க டொலர்கள்.

## இரண்டு வருட ஒப்பந்தம்

அமெரிக்க நிர்வாகிகளின் தலைமையில் இயங்கும் ஸ்தாபனம்.

மற்றும்

சகல விபரங்களுக்கும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் பயண அமைப்பாளர்:

# எஸ்.பி. அன்ரன்

No. 64ᴮ 1/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக) (C/897)

---

# COOL ROOM SPACE

Cool room facilities provided free of charge to store medicines only in Bulk for two weeks—limited space available.
Contact:- Agro - Marine Ltd-
35 Bankshall Street, Jaffna.
(8252)

---

# 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

Thiagarajah Dharmarajah
(Rtd Officer, Education Dept)

அன்னையின் மடியில்: 16 - 08 - 1929
ஆண்டவன் அடியில்: 11 - 11 - 1988

இவர் நல்லூர் தெற்கு முதலியார் வளவை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவருமாவார்.
அன்னாரின் ஈமைக் கிரியைகள் 13 11 88 அன்று கொழும்பில் நடைபெற்றன.

எங்கள் உள்ளத்தில் குடியிருக்கும்
அன்புத் தெய்வமே! எமக்கு
நல்வழி காட்டியவரே!
உன்னை எமதுயிர் உள்ளவரை
என்றென்றும் எமது உள்ளத்தில்
வைத்து பூஜிப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்புச் சகோதரர்கள்,
மைத்துனிமார், பெறுமக்கள்.

உரும்பராய் தெற்கு.
உரும்பராய். (8??2)

---

# 'M' THREE TRAVEL

பெருமையுடன் வழங்கும்
## உடனடி வேலைவாய்ப்புக்கள்
கீழ்க்காணும் வெற்றிடங்கள் தற்போது எம்மிடம் உண்டு

## சவூதி:-

21 வயதிற்கு மேல்

| | | |
|---|---|---|
| Mason | — | மேசன் |
| Carpenters | — | தச்சுத்தொழிலாளர் |
| Generator Operators | — | ஜெனறேற்றர் ஒப்பறேற்றர் |
| Genarator Mechanics | — | ஜெனறேற்றர் மெக்கானிக் |
| Packing Labourers | — | பக்கிங் தொழிலாளர் (ஆங்கில அறிவு ஓரளவு அவசியம்) |
| University Cleaners | — | சர்வகலாசாலை கிளீனேர்ஸ் |

நம்பிக்கை, நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

# 'M' Three Travel

★ புதிதாக கடவுச்சீட்டு செய்பவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்
★★ எங்களிடம் புதுக்கடவுச்சீட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்
★ பொன்ட் (Bond) செய்து கொடுக்கப்படும்

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

சோதி லேன், கல்லூரி வீதி, காங்கேசன்துறை.
No, 1,2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C/907)

---

# முதலாம் ஆண்டு அஞ்சலி

தோற்றம்: 1-1-1940

மறைவு: 28-11-1987



திதி: 11-12-1988

செல்வி
## புஸ்பதேவி கணபதிப்பிள்ளை

அன்பாலும் பண்பாலும் எமையெல்லாம் அடிமைப்படுத்தி ஆசிரியப் பணியினுக்கோர் அரணாக இருந்தீரே! கனிவான பேச்சும் கலகல வென்னும் சிரிப்பும் கேளாது ஏங்குகின்றோம். கனவாகப் போனதேனோ.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
நவாலி மகாவித்தியாலயம்,
மானிப்பாய். (8085)

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தங்கராசா சுப்பிரமணியம்

தோற்றம்: 23 - 6 - 1923
மறைவு: 4 - 12 - 1986
திதி: 11 - 12 - 1988

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மையெல்லாம் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.
அல்லாரை வடக்கு, மீசாலை. (8251)

---

# Diploma in Nursing
# தாதிகள் பயிற்சி நெறி

10ஆம் பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன

✶ சிறந்த விரிவுரையாளர் குழு
✶ விஷேட பாமஷி ஆங்கில வகுப்புக்கள்

உங்கள் பதிவுகட்கு:

# NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peters Lane
Hospital Road,
Jaffna.
(C/ 903)

---

# அந்தியேஷ்டி அழைப்பிதழ்

செல்வன் ஹரிசூதனன் சதாசிவம்
(பரி யோவான் கல்லூரி மாணவன்)

14 11-88 இல் காலமான எனது மகன் செல்வன் ஹரிசூதனன் சதாசிவத்தின் [பரி. யோவான் கல்லூரி] அந்தியேஷ்டிக் கிரியைகள் 13 12 88 வருகிற செவ்வாயன்று எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி V. சதாசிவம் குடும்பத்தார். (8094)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் கந்தையா பாலசுப்பிரமணியம்
(இளைப்பாறிய அரச லிகிதர்)

தோற்றம் 07 01 1930
மறைவு 11-11-1988

அப்பா!...

அன்னையை நாம் சிறுவயதில்
இழந்து நின்ற போதிலே
அன்னையும் தந்தையுமாய்
அன்பால் எமை வளர்த்தீர்
பாசமுடன் எமை வளர்த்து
வாழவைத்த தெய்வமே
அணைத்த கரங்கள் எங்கே
அழுது புலம்புகின்றோம்
விண்ணுலக சாம்ராஜ்யம்
இறைவனடிதான் சேர்ந்தீர்
உங்கள் ஆத்ம சாந்திக்கு
என்றென்றும் பிரார்த்திப்போம்!

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள் பேரன்மார்.

தொல்புரம் மேற்கைச் சேர்ந்த கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள் 11 11-1988 இல் சிவபதமடைந்தார். இவர் கந்தையா தையல்முத்துவின் அன்பு மகனும். காலஞ்சென்ற மகாலட்சுமியின் அன்புக் கணவரும். திருமதி திருவாத்திப்பூ விமல்ராஜ் Saudi-Arabia) திருமதி வள்ளியம்மை ஜெயரஞ்சன் (Canada) பரசுராம் (பொறியியலாளர் UK), பண்டரிராம் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் விமல்ராஜ் (நிர்வாக செயலாளர் - Saudi). ஜெயரஞ்சன் (பொறியியலாளர் Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீப், பிரணவன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், தட்சணாமூர்த்தி, இரத்தினம், கபணசன், லட்சுமிகாந்தன், வரதராஜா, தனபாக்கியம், குணபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும். Dr. இராசநாயகத்தின் அன்புச் சகலனும், Dr. பாலகிருஷ்ணனின் (Malaysia) அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இன்று (11 12 88) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்

அன்னாரின் பிரிவால் வாடும்
தாயார், பிள்ளைகள், மருமக்கள்
பேரன்மார், உறவினர்கள்.

தொல்புரம் மேற்கு.
சுழிபுரம். (8256)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்.

பொருள்:
அறிவில்லாதவனுடைய மிகப் பொருந்திய நட்பை விட அறிவுடையவரின் நட்பில்லாத தன்மை கோடி மடங்கு நன்மை தருவதாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 392/2 நாவலர்வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி 24605 22073
11-12-1988 த. பெ. இல 23


## தமிழுக்குச் சம அந்தஸ்து

தமிழும் இலங்கையின் அரசகரும மொழியாகி விட்டது. கடந்த வெள்ளிக்கிழமை அதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால், அனேகமாக ஏகமனதாகவே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்தின் மூலம், சிங்களத்துடன் தமிழும் நாட்டின் அரசகரும மொழியாக அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெறுகிறது.

எவர் எந்தக் கண்கொண்டு நோக்கினும், இது இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சி.

முப்பத்திரண்டு வருடங்களுக்குப் பின்னர், தமிழ் மக்கள் நடத்திய போராட்டத்துக்கு இப்போதுதான் பலன் கிடைத்திருக்கிறது.

1955 ஆம் ஆண்டில் அந்நாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை, கொக்குவிலில் வைத்துத் தமிழுக்கும், சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வழங்கப்போவதாகக் கூறியதிலிருந்து முளைவிட்ட மொழிப் பிரச்சினைக்கு, இப்போது தான் தீர்வு காணப்பட்டுள்ளது.

மொழி உரிமை மனித உரிமைகளில் ஒன்று. தமிழர்களின் அந்த உரிமையை மறுத்து, சிங்கள அரசியல் தலைவர்கள் தம் மக்களைத் தவறான வழியிட்டு, அவர்களின் உணர்ச்சிகளைத் தூண்டி, தமிழர்களுக்கு எதிராக இனக்கலவரங்களையும் நடத்துவித்தனர்.

இந்த நாடு இப்போது இருக்கும் இழிநிலைக்கும், சகல இன, சமூக மக்கள் படும் கஷ்டங்களுக்கும் மூலகாரணமாக இருந்தது மொழிப்பிரச்சினையே. சிங்களப் பேரினவாதத்தின் செல்வாக்கில் சிக்குண்ட சிங்கள அரசியல்வாதிகள், யதார்த்தத்தை மறந்த நிலையில், மாயையில் அகப்பட்ட நிலையில் தமிழர்களது மொழி உரிமையைப் பறிக்கக் கங்கணம் கட்டிச் செயற்பட்டார்கள்.

தமிழர்களின் மொழி உரிமை வழங்கப்பட வேண்டும். சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டும் என்று முதலில் வாதாடிய இடதுசாரித் தலைவர்கள் கூட, பின்னர் ஆட்சி அதிகார ஆசைகளால் உந்தப்பட்டு, தமது கொள்கையை மாற்றிக் கொண்டனர்.

விளையும் பயிரை முளையில் தெரியும். அதே போல நாடு இன்றுள்ள சீர்கெட்ட நிலைக்கு மாறும் என்பதை 1956 இல் நிறைவேற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் கட்டியம் கூறியது.

அந்தத் தூரதிருஷ்டியுடன் காணவல்ல சிங்கள அரசியல் தலைவர்கள் எவரும் இருக்கவில்லை. நாட்டைவிட, நாட்டின் மக்களைவிடத் தமது பதவிகளை நேசித்தவர்களாகவே அவர்கள் எல்லோரும் விளங்கினார்கள்.

எனினும், நாட்டை மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பீடித்திருந்த பெரும் வினை இப்போதாவது நீங்கி இருப்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்லதாகும். காலங்கடந்தாவது தமிழர்களின் மொழி உரிமையின் அவசியத்தை சிங்களத் தலைவர்கள் உணர்ந்தது நன்மை தர வல்லதாகும். அந்த உணர்வை உருவாக்க இந்தியா உந்து சக்தியாக இருக்க வேண்டியதாயிற்று.

மொழி உரிமைக்காக தமிழ் மக்கள் நடத்திய போராட்டங்கள், அவற்றை முறியடிக்க நசுக்க அரசாங்கங்கள் கையாண்ட தந்திரங்கள் (நியாயமான தமிழ் மொழி உபயோக விதி உட்பட) நாட்டின் அரசியல் சரித்திரத்தில் இடம் பிடித்த நிகழ்ச்சிகள்.

என்னும் மொழி உரிமைக்காக தமிழ் மக்கள் நடத்திய போராட்டங்கள், வீண்போகவில்லை. அதற்காகத் தமது இன்னுயிர் ஈந்தவர்களின் (இனக்கலவரங்களில் இறந்தவர்கள் உட்பட) தியாகம் அவமாகவில்லை. நியாயமும் தர்மமும் உடனுக்குடன் உருக்காட்டாவிடினும் உரிய காலத்தில் நிலைகொள்ளும் என்பது இதன் மூலம் நிரூபணமாகி இருக்கிறது.

அரசியல்வாதிகள் சட்டத்தை நிறைவேற்றினாலும், அதனைச் செயற்படுத்தும் அதிகாரிகள், தமிழ் மக்களின் மொழி உரிமைக்கு இடைஞ்சல் கொடுக்காமல் பார்த்துக் கொள்வதே இனி முக்கியம்.

மொழி உரிமை போலவே, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி உரிமை, இனறைமை என்பனவும் அவர்களது பிறப்புரிமைகள். இந்தப் பேருண்மையையும் சிங்களத் தலைவர்களும் சிங்கள மக்களும் உணரத் தொடங்கினால் இந்த நாடு இனியும் சீரழியாது. சகல இன மக்களும் சகோதரர்களாகவும், நண்பர்களாகவும், அமைதியான சகவாழ்வு நடத்த வழி பிறக்கும்.

---

**ஓர் உறையில் இரண்டு வாள்கள் இருக்க முடியுமா? - வீரப்பன் கேள்வி**

# ஜா-ஜெ அணிகள் இணைப்பு முயற்சி தோல்வியில் முடிவு!

சென்னை, டிச 10

அ. தி. மு. க வின் ஜெயலலிதா, ஜானகி அணிகளை ஒன்று சேர்க்க எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன என்று அறிவிக்கப்படுகிறது.

மீண்டும் இணையும் யோசனையை ஜெயலலிதா அணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவரே முன்வைத்து இருதரப்பினருடனும் பேச்சுக்கள் நடத்தி வந்தார்.

உயர் மட்டத் தலைவர்களுடன் இப்பேச்சுக்கள் நடைபெறவில்லை எனவும் நடுத்தலைவர்களே இதில் கலந்துகொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பைக் கோரும் சுவரொட்டிகளும் சென்னை நகரின் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்தன.

சுவரொட்டிகளில் 'எம் ஜி ஆர் பக்தர்கள்' என்று அச்சிடப்பட்டிருந்தது.

'மாற்று அரசியல் கட்சிகளின் உதவி இன்றி எம் ஜி ஆர். ஆட்சியை நிறுவ இணைப்பே தேவை' — என்று அச்சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தோல்வியில் முடிந்த இணைப்பு முயற்சி பற்றி ஜானகி அணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் வீரப்பன் சொன்னதாவது;

இணைப்புப்பற்றி ஜெ-அணியினர் நோட்டம் விட்டுப்பார்த்தார்கள். ஜானகி தலைமையிலான உயர்மட்டக் குழுவுடன் பேச்சு நடத்தத் தயாரா என்று கேட்டோம். அவ்வளவுதான் பதில் இல்லை.

ஜானகி அணிதான் உண்மையான அ. தி. மு. க என்று கூறுவதுடன் தேர்தல் சின்னம் குறித்து தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த வழக்கையும் வாபஸ் பெறவேண்டும் என்று நான் நோட்டம் விட்டவர்களிடம் கூறிவிட்டேன்.

இணைப்பு முயற்சி என்று ஜெ அணி கூறியது, இந்திரா காங்கிரஸ் கட்சியை 'பிளாக்மெயில்' பண்ணித் தங்களுடன் கூட்டுச்சேர வைக்க அல்லது ஜானகி அணியின் தேர்தல் பணிகளை சீர்குலைக்க வைப்பதற்காக இருக்கும்.

எப்படியிருப்பினும் 'ஓர் உறையினுள் இரு வாள்கள் இருக்கமுடியாது'.

இணைப்பு யோசனையை ஜானகி ஏற்கவுமில்லை; நிராகரிக்கவுமில்லை.

ஜெயலலிதா அணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் எஸ் டி சோமசுந்தரம் சொன்னதாவது;

இணைப்பை நாம் விரும்பவில்லை. மன்னிப்புக் கேட்டு ஜானகி அணியில் சேர நாம் என்ன பிழை விட்டோம்?

மீண்டும் சேர்ந்து உழைப்போம என்று எம். ஜி ஆரின் ஆதரவாளருக்கு ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்து வருகிறாரே ஒழிய இரண்டு அணிகளையும் இணைக்க அல்ல.

இதனை மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு விட்டார்கள்.

எமது நிலை தெளிவானது ஜெயலலிதா தலைமையில் எம் ஜி ஆர். ஆட்சி அமைக்க அனைவரும் அணிதிரள வேண்டும்.

ஜெ அணியின் முன்னாள் அமைச்சர் டாக்டர் ஹண்டே சொன்னதாவது;

இணைப்பு யோசனை ஜானகி அணியினால் முன்வைக்கப்பட்டது. அவர்களின் யோசனையை நான் ஜெயலலிதா முன் வைத்தேன். அந்தளவில் விஷயம் நிற்கிறது என்று சொன்னார் டாக்டர் ஹண்டே. (எ)

---

## ஆப்கனில் யுத்த நிறுத்தம் அமெரிக்கா நிராகரிப்பு

நியூயோர்க், டிச 10

ஆப்கானிஸ்தானில் ஜனவரி முதலாம் திகதி முதல் யுத்த நிறுத்தம் கொண்டு வரப்படவேண்டும் என்ற சோவியத் அதிபர் கோர்பச்சேவின் வேண்டுகோளை அமெரிக்கா நிராகரித்தது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் இதனைச் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

அதிபர் கோர்பச்சேவ், அதிபர் றேகன் உப ஜனாதிபதி புஷ் ஆகியோரைச் சந்தித்துப் பேசிய பின்னர் திரு. ஷுல்ட்ஸ் செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

இரண்டு தலைவர்களும் ரசாயன ஆயுதங்களைத் தடைசெய்யும் உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட வேண்டும் என்று ஒப்புக் கொண்டிருக்கின்றனர் என்றும் திரு. ஷுல்ட்ஸ் தெரிவித்தார்.

யுத்தநிறுத்தக் கோரிக்கையை திரு. கோர்பச்சேவ் ஐ நாவில் பேசும் போது விடுத்திருந்தார்.

## ஒரு கொடியின் கீழ் ஒன்றுபடுவோம்

சென்னை டிச 10

எம். ஜி ஆர். ஆதரவாளர்களிடையே மீண்டும் நல்லுணர்வை ஏற்படுத்தும் அறிக்கைகளை வெளியிட வேண்டாம் என்று அ. தி. மு. க. தலைவி ஜானகி அம்மாள் கேட்டிருக்கிறார்.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றில் அவர் கூறியிருப்பதாவது;

எம். ஜி. ஆர். ஆட்சியை மீண்டும் அமைக்க அனைவரும் ஒரு கொடியின் கீழ் ஒன்றுதிரள வேண்டும்.

கடந்த காலங்களில் நடந்தவற்றை மறந்து ஒன்று சேரவேண்டும் என்ற யோசனையை நான் பூரணமாக வரவேற்கின்றேன்.

எம். ஜி ஆர். அரசை மீண்டும் அமைக்கவே நான் கடந்த 10 மாதங்களாக உழைத்து வருகின்றேன்.

இப்படி ஜானகி அந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (எ)

## ஹெலிகொப்டர் விபத்து; ஐவர் பலி

நியூயோர்க், டிச.10

அமெரிக்காவின் ஹெலிக்கொப்டர் ஒன்று ஹொண்டுரஸில் நொருங்கி வீழ்ந்ததில் 5 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

நாலவரின் சடலங்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டது ஐந்தாவது வீரரின் சடலம் கண்டுபிடிக்கப்படவில்லை. (எ)

## அரபாத் கூற்று

ஸ்டொக்ஹோம், டிச 10

இஸ்ரவேல் என்ற நாடு இருப்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசீர் அரபாத் இப்படித் தெரிவித்தார்.

அரபாத் 'இஸ்ரவேல்' என்ற பெயரைப் பகிரங்கமாகப் பாவித்தது இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகிறது. (ச)

## அமெரிக்க விமானம் மீது ஏவுகணைத் தாக்குதல்

வாஷிங்டன், டிச 10

அமெரிக்க விமானம் ஒன்று மொரிட்டானியா நாட்டில் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்காகியது.

விமானத்தில் இருந்த ஐந்து பேரும் உயிரிழந்தனர்.

மொரக்கோ நாட்டில் பரவி வரும் வெட்டுக்கிளிகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான கிருமிநாசினிகளை எடுத்துச் சென்றுகொண்டிருந்தபோதே, ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கானது.

---

# சவூதியில் வேலைசெய்வோரின் காப்புறுதிப் பணம் விரைவில் கிடைக்கும்

றியாத்திலிருந்து செ ஜீவரத்தினம்

றியாத், டிச 11

சவூதி அரேபியாவில் வேலை செய்த இலங்கையர்களது வேதனத்தில் இருந்து கழிக்கப்பட்ட காப்புறுதிப்பணம் (G O S I) வழங்கப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

இதன் முதற்கட்டமாக தற்பொழுது சவூதி அரேபியாவில் பணியாற்றிக்கொண்டிருப்பவர்களே இப்பணத்தைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

இதற்குரிய விண்ணப்பங்களைத் தற்பொழுது வேலைசெய்யும் முகவர் மூலமே அனுப்பிவைத்தல் வேண்டும்.

காப்புறுதிப் பணம் கழிக்கப்பட்ட அட்டை இலக்கத்தையும் முதல் வேலைசெய்த முகவர்களின் வேலைச்சான்றிதழ்களையும் தற்பொழுது வேலைசெய்யும் முகவரினூடாக வழங்கப்பட்ட (அக்கோமா, அடையாள அட்டைப் பிரதியையும் இணைத்துக் காப்புறுதி ஸ்தாபனத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பிரதிகள் அனைத்தும் சரியாக இருப்பின் அவர்களுக்குக் காப்புறுதிப் பணம் உடன் வழங்கப்பட இருப்பதாக அறியவருகிறது.

தற்பொழுது சவூதியில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு காப்புறுதிப்பணம் கழிக்கப்படுவதில்லை என்பதே தெரிந்ததே. (ஒ)

## தற்செயலாகப் பாய்ந்த குண்டு மாணவனை பதம் பார்த்தது

இந்திய இராணுவ ஜவான் ஒருவரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததால் சுட்டிபுரம் கணேஸ் (வயது -14) என்ற மாணவன் காயமடைந்தார்.

நெல்லியடி மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் அமைந்திருந்த 'சென்றிக்கு' முன்னால் கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

மாணவன் காயமடைந்ததைக் கண்ட அங்கிருந்த இராணுவ அதிகாரி காயமடைந்த மாணவனைத் தமது வாகனத்தில் ஏற்றி மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தார். (ஐ-160)

## பிரேமா வவுனியா வருகிறார்

வவுனியா, டிச 11

நாளை திங்கட்கிழமை ஐ. தே. க. வேட்பாளரான திரு ஆர். பிரேமதாசா வவுனியா பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரின் பல இடங்களிலும் இவரது வருகை குறித்து தெரிவிக்கும் சுவரொட்டிகளும் காணப்படுகின்றன. (ஐ-164)

## சனசமூக ஒன்றியக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச 11

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் விசேட ஆட்சிக் குழுக்கூட்டம் இன்று 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு, யாழ். சன்மார்க்க வித்தியாலய மண்டபத்தில் (பெருமாள் கோவில் முன்பாக) ஒன்றியத் தலைவர் திரு. ச. ம. தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சனசமூக நிலையங்களின் சேத மதிப்பீடுகள் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகவும் பாதிப்புற்ற சனசமூக நிலையங்கள் சேத மதிப்பீடுகளை இக்கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறும் ஒன்றியச் செயலாளர் திரு. சி. வரதராசா தெரிவித்தார். (அ)

## சேர். பொன் இராமநாதன் குரு பூசை

பரமேஸ்வர ஆலய ஆளுநர் சபையும் யாழ் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றமும் இணைந்து சேர். பொன் இராமநாதன் குரு பூசையை நடத்துகின்றன.

எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு பரமேஸ்வரன் ஆலயத்தில் சங்காபிஷேகம் ஆரம்பமாகும். (ஒ)

## சமய சந்திகளில்

### இலட்சார்ச்சனை பூர்த்தியும சூரசம்ஹாரமும்

யாழ்ப்பாணம் டிச 11

தாவடி ஸ்ரீ அருள்மிகு அம்பலவாணவேத விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு "பஞ்சமுக விநாயகருக்கு" லட்சார்ச்சனை பூர்த்தி விழா நடைபெறும்.

14 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 00 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடைபெற்று— பஞ்சமுகவிநாயகர் வீதியுலா வரும் அலங்காரக் காட்சியுடன் கஜமுகா சூர சங்காரமும் இடம்பெறும்.

இரவு விநாயகருக்கு அபிஷேகம் இடம்பெறும். (ஒ)

## புராண படன பூர்த்தி

யாழ்ப்பாணம் டிச 11

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் திருவிளையாடற் புராண படனம் பூர்த்தி வைபவம் நாளை 12 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

புராண படனத்தைத் தொடர்ந்து பூசை, ஆராதனைகள் இடம் பெறும் அப்போது பௌராணிகர்களை சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா கௌரவிப்பார். (ஒ)

**ஸ்ரீலங்கா இராணுவ பாதுகாப்புடன்**

## வவுனியா-அனுராதபுரம் பஸ்சேவை நடைபெறுகிறது

வவுனியா, டிச 11

கடந்த சில தினங்களாக ஸ்ரீலங்கா இராணுவத்தின் பாதுகாப்புடன் வடபிராந்திய இ. போ. ச பஸ் ஒன்று வவுனியாவுக்கும் அனுராதபுரத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து காலை புறப்பட்டுச் சென்று பிற்பகல் அனுராதபுரத்திலிருந்து திரும்பி வரும் இந்தப் பஸ்ஸில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சாரதியும் நடத்துனரும் கடமையில் ஈடுபடுகின்றார்கள்.

தென் பகுதியிலிருந்து அனுராதபுரத்தில் வந்திறங்கும் வடபகுதி பயணிகளுக்கும் அனுராதபுரத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் குறுகிய தூரம் பயணம் மேற்கொள்பவர்களுக்கும் இந்த பஸ்சேவை மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையில் வவுனியாவிற்கும் அனுராதபுரத்திற்கும் இடையில் ஒன்றிரண்டு தனியார் வாகனங்களும் இடையிடையே சேவையில் ஈடுபடுகின்றன.

அனுராதபுரத்திலிருந்து கொழும்புபிறகு இராணுவப் பாதுகாப்புடன் மட்டுப்படுத்தப்பட்ட இ.போ.ச.சேவையும், தனியார் பஸ்கள் சிலவும் சேவையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது எனினும் தனியார் பஸ்களில் அதிக கட்டணம் அறவிடப்படுகிறதாம். (ஒ 164)

## வவுனியாவிலும் எரிபொருள் பற்றுக்குறை

வவுனியா, டிச 11

வவுனியா மாவட்டத்திலும் எரிபொருள் பற்றுக்குறை நிலவுகின்றது. அங்கீகாரம் பெற்ற எரிபொருள் விற்பனையாளர்களிடம் பெறமுடியவில்லை. எனினும் கறுப்புச் சந்தையில் ஒரு லீற்றர் பெற்றோல் 40 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. (ஒ 164)

**உடுவில், சாவகச்சேரி உ. அ. அ. பிரிவில்**

## மீளக் குடியமர்ந்தோர்: குடும்ப தலைவர்களின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம் டிச 11

இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறை வந்து இறங்கிய அகதிகளில் உடுவில், சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்தவர்களின் குடும்பத் தலைவர்கள் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் நாளை 12 ஆம் திகதி திங்கட்கிழமையும், சாவகச்சேரியைச் சேர்ந்தவர்கள் 14 ஆம் திகதி புதன்கிழமையும் தகுந்த ஆவணங்களுடன் சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ-10)

## மருத்துவக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் டிச 11

"இருதயம் தொடர்பான நோய்களும் அவற்றைத் தடுக்கும்முறைகளும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ் மருத்துவபீடத்தின் சமூக சுகாதாரப் பிரிவுத்தலைவர் டாக்டர். என் சிவராசா, யாழ் போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ் நச்சினார்க்கினியன், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (உ-10)

## முடப்பட்ட பாடசாலைகள் மீண்டும திறப்பு

மாங்குளம் டிச 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூடப்பட்டு விடுமுறை வழங்கப்பட்ட பாடசாலைகள் மீண்டும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை திறக்கப்பட்டுள்ளன.

கல்வி அதிகாரியின் உடனடிப் பணிப்பை அடுத்து மாங்குளம் பாடசாலையும் திறக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 15 ஆம் திகதியே விடுமுறை வழங்கப்படவுள்ளது. (ஒ-94)

## இன்று எரிபொருள் விநியோகம்

பருத்தித்துறை, டிச 11

பருத்தித்துறை, புலோலி ஆகிய பகுதிகளுக்கான எரிபொருள் இன்று விநியோகிக்கப்படும்.

இம்முறை எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்படும்.

மேலும் அடுத்த வாரமும் இனி நெருக்கடியிலிருந்து எரிபொருளை நிரப்பிக் கொண்டு பௌசர்கள் வருமெனவும் தெரிகிறது. (அ-118)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுரம் ✶ பெனாரஸ்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள
மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

# உதயன்

11 - 12 - 1988 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

## இந்தியாவுக்கு வெற்றி! ஸ்ரீகாந்த் அபார ஆட்டம்!!

விசாகப்பட்டினம் டிச 11

விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணியை இந்திய அணி 4 விக்கெட்டுக்களினால் தோற்கடித்தது.

தமிழக வீரரான கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியதோடு சிறப்பாக பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களை எடுத்தது.

இந்திய அணி 46 3 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 197 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தில் வெற்றி பெற்றது. ஸ்ரீகாந்த் 70, அஸாருதீன் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களைப் பெற்றனர். (உ)

குருநகர் இறங்குதுறையூடாக

## 25 இயந்திர படகுகளுக்கு இரவில் மீன்பிடிக்க அனுமதி

குருநகர், டிச 11

குருநகர் இறங்குதுறையூடாக நேற்று இரவு நேர மீன்பிடிக்கு இருபத்தைந்து இயந்திரப்படகுகள் அனுமதிக்கப் பட்டன.

இரவுநேர மீன்பிடிக்கு குடாக்கடல் பகுதியில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக தடை விதிக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் 23-ஆம் திகதியில் இருந்து ஓரிரு தினங்கள் இரவு நேர மீன்பிடிக்கு அனுமதிக்கப்பட்டு மீண்டும் தடை விதிக்கப்பட்டிருந்தது

நேற்று நீக்கப்பட்ட இரவுநேர மீன்பிடி மேலும் தளர்த்தப்படலாமென்று எதிர் பார்க்கப்படுகிறது. (ஒ-51)

## சுட்டுக் கொலை

வவுனியா, டிச 11

கடந்த வெள்ளியன்று காலை கோவில் புதுக்குளம் மாத்தறை பாஸ் சந்தியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டார். (ஒ 160)

'ஹெவி டீசல்'' கையிருப்புக் குறைவதால்

## மின்சாரத்தைச் சிக்கனமாக பாவிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 11

கொழும்பிலிருந்து அடுத்த எரிபொருள் ரயில் யாழ் வரும் வரையில் மின்சாரத்தைச் சிக்கனமாக விநியோகிக்க வேண்டிய ஒரு நிலை மின்சார சபைக்கு ஏற்பட்டிருக்கிறது அதனால் மின்சாரத்தை வீண் பாவனை செய்யவேண்டாம் எனக் கேட்கப்படுகிறது.

சுன்னாகத்திலுள்ள மின்சார நிலையத்திலுள்ள ஜெனரேட்டர்களை இயக்குவதற்குத் தேவையான ''ஹெவி டீசலின்'' கையிருப்பு குறைந்து வருவதே இதற்குக் காரணமாகும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன

தற்போது கையிருப்பில் இருக்கும் ''ஹெவி டீசல்'' சுமார் பதினைந்து நாட்களுக்கே போதுமானதாக இருக்கிறது

இதனால் தற்போது விநியோகிக்கப்படும் மின்சாரத்தை ஒன்று விட்டு ஒருநாள் வழங்க வேண்டிய நிலை ஏற்படக் கூடும் எனக் கூறப்படுகிறது.

ஆனால் ஆஸ்பத்திரி போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு எந்த விதத் தடையும் இல்லாது தினமும் இருபத்து நான்கு மணி நேரமும் மின்சாரம் வழங்கப் படும்.

அத்தியாவசிய தேவைகளுக்கு மின்சாரத்தை விநியோகிப்பதற்காக இரண்டு லட்சம் லீட்டர் ''ஹெவி டீசலை'' எப்பொழுதும் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும்

தற்போது இந்த இரண்டு லட்சம் லீட்டர் ''ஹெவி டீசலுக்கு'' மேலதிகமாக சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரம் லீட்டர் ''ஹெவி டீசல்'' யாழ் மின்சார சபையிடம் கையிருப்பில் இருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை மின்சாரம் உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்களுக்குச் சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதிலும் தற்போது கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

நீரைச் சுத்திகரிப்பதற்குத் தேவையான இரசாயனப் பொருள்களை கொழும்பிலிருந்து பெற்றுக்கொள்வதில் பலவிதமான சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றனவாம். (ஒ-ஐ-5)

## இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி கிளையில்....!

இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் இன்று ஆயிரத்துப் பதினெட்டுக் குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பெரிய கடை கிராம சேவையாளர் பிரிவில் 874 குடும்பங்களுக்கும் முஸ்லிம் வட்டார கிராம சேவையாளர் பிரிவில் 144 குடும்பங்களுக்கும் இந்த நிவாரணம் கிடைக்கும்.

நிவாரணப் பணம் பெறவேண்டியவர்கள் தவறாது வங்கிக்கு சமுகம் தரும்படி யாழ் மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-5)

## நான்கு அமைச்சர்.....

ராட்சி, கல்வி, வீடமைப்பு, கூட்டுறவு, சுகாதாரம், சட்டம் ஒழுங்கு ஆகிய அதிகாரங்கள் முதலமைச்சர் வசமே விடப்பட்டுள்ளன.

முதலமைச்சர் திரு அ. வரதராஜப்பெருமாள், அமைச்சர்கள் ஜனாப் அபுயூசுப், திரு. சி. எம். கணேசலிங்கம் ஆகியோரின் பெயர்கள் வேட்பாளர் பட்டியலில் ஆரம்பத்தில் இடம்பெற்றிராதபடியால் அவர்கள் மூவருக்கும் இடம் விட்டுக் கொடுப்பதற்காக பட்டியலில் இடம்பெற்றிருந்தவர்களில் மூவர் ராஜினாமாச் செய்திருந்தனர்.

ஈ என் டி எல். எவ். வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்ற திரு. இரத்தினசிங்கம் மகேந்திரனின் இடத்துக்கு திரு. எம். கணேசலிங்கமும்—

ஈ பி ஆர் எல் எவ் பட்டியலில் இடம்பெற்ற திரு எம் ஆர் குலதீபனின் இடத்துக்கு திரு அ வரதராஜப் பெருமாளும்—

ஜனாப் எம் மீரான் முஹைதீனின் இடத்துக்கு ஜனாப் அபுயூசுப்பும் நியமிக்கப்பட்டனர்.

## அவ்வப்பகுதி மக்களுக்கு காணிப் பங்கீட்டில் முன்னுரிமை

கொழும்பு, டிச 11

காணிகள் பகிர்ந்தளிக்கும் போது அந்தந்தப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும.

—இப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் பிரேமதாஸ, நேற்று இரவு ரூபவாஹினி மற்றும் வானொலி மூலம் ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

1956 க்குப் பின்னர் கருத்து வேற்றுமைக்கு காரணமாக இருந்த மொழி மற்றும் பிரசா உரிமைப் பிரச்சினைகளை நாம் தீர்த்து விட்டோம்

இந்த இரண்டு பிரச்சினைகளையும் கிளறிக் கிளறி மக்களைக் கொன்று குவித்தவர்களும் நாம் கொண்டு வந்த தீர்வுகளை ஏற்றுள்ளனர்.

— இப்படி திரு. பிரேமதாஸ தனது உரையில் மேலும் தெரிவித்தார். (உ-எ)

## மரண விசாரணை நடைபெற்றது

யாழ்ப்பாணம், டிச 11

யாழ்நகரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமடைந்த சின்னத்தம்பி பராபரனின் மரணவிசாரணை நேற்று யாழ் ஆஸ்பத்திரியில நடைபெற்றது. (உ-10)

## சுமுகமாக....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகத்தின் சகல அங்கங்களிடையேயும் தெளிவான, பரஸ்பர புரிந்துணர்வையும் மதிப்புணர்வையும் நிச்சயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் இந்தப் பணியின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் உணர்ந்து வேண்டிய ஒத்துழைப்பைத் தரும் ஊழியர், மாணவர் சங்கங்களுக்கு எமது சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

நடந்த பேச்சுவார்த்தைகளினூடாக, நடந்தேறிய பிழைகளைத் தொடர்ந்தும் நடக்கவிடாது தடுப்பதிலும், நடந்த விடயங்கள் சம்பந்தமாகப் பூரணமான விசாரணையொன்று நடத்தப்படவேண்டுமென்பதிலும் சகலரும் ஒத்துக்கொண்டுள்ளனர்.

இந்த அடிப்படையில் நாளை திங்கட்கிழமை பல்கலைக்கழகத்தில் சுமுகமான, சகஜ நிலையை மீளக்கொண்டுவர முடியுமென எமது சங்கம் நம்புகின்றது

யாழ் பல்கலைக் கழகம் மூடப்படாது பார்க்கப்படுவது இப்பல்கலைக்கழகம் தான் இயங்கும் சமூகத்திற்குச் செய்யும் முக்கிய கடமையென்ற அடிப்படையிலேயே பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இந்த சமரச நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (ஒ)

## இந்திய உதவி விரைவு

புதுடில்லி, டிச 11

ரஷ்யாவில் ஆர்மேனிய மாநிலத்தில் பூமியதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருந்துப் பொருள்கள், உலர் உணவுப் பொருள்கள் மற்றும் நிவாரணப் பொருள்களை இந்தியா நேற்று விசேட விமானம் மூலம் அனுப்பி வைத்தது.

அங்கு இந்திய மருத்துவர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஒ)

## பேரி சுந்தரம் தூதுவரானர்

கொழும்பு டிச-11

சட்டத்தரணி திரு. ஜெயா பெரி சுந்தரம் இந்தோனேஷியாவுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டார்.

திரு. ருத்திரா ராஜசிங்கத்தின் இடத்திற்கு திரு பெரிசுந்தரம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## 30 தீவிரவாதி----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லும் அனாதரவாகக் கிடக்கக் காணப்பட்டன.

சடலங்களுக்கு அருகில் ''மக்களைக் கொலைசெய்தமைக்கான தண்டனை'' என்று எழுதப்பட்ட கடிதங்களும் காணப்பட்டன. (உ-எ)

## தெற்கில் 27.... .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

சிக்கியது. இதில் ஐ தே க. ஆதரவாளர் ஒருவர் உயிரிழந்தார். சில இராணுவத்தினர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் தீவிரவாத சந்தேக நபர் [illegible] பட்டனர். (உ-எ)

தென்பகுதி அசம்பாவிதங்கள்:

## பெற்றோல் குண்டு வீசியதில் அலுவலகம் தீக்கிரை

### டயர் தொழிற்சாலையும் எரிப்பு

கொழும்பு, டிச 11

வெலிஓயாவில் சிறிபுர உதவி அரசஅதிபர் அலுவலகம் பெற்றோல் குண்டு வீசப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

வியாழன் இரவு அத்துறுகிரியாவில் தனியாருக்குச் சொந்தமான டயர் தொழிற்சாலை தீக்கிரையாக்கப்பட்டது.

காலியில் அதிரடிப் பொலிஸ் படை அதிகாரி ஒருவரின் வீடு எரிக்கப் பட்டது.

திடீர்மரண விசாரணை அதிகாரியான ஏ. டபிள்யு. குணரத்தின கடந்த வியாழன் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

அனுராதபுர மாவட்டத்தில் கலன்பிந்துனுவேவாவில் ரோந்து வந்த இராணுவப் பிரிவு ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

ஒரு சிப்பாய் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். இன்னொரு சிப்பாய் பலத்த காயங்களுக்காளானார்.

பிபிலே என்னுமிடத்தில் பிபிலே எம் பி. ஆர் எம். தர்மதாஸ பண்டாவின் வாசஸ்தலத்திற்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றைத் தோண்டி எடுத்துக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். (ஒ எ)

## கிளேமோர் கண்ணிக்கு 2 பொதுமக்கள் பலி!

கொழும்பு, டிச 11

வெலிஓயாப் பிரதேசத்தில் சமளாங்குளம் என்னுமிடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற கிளேமோர் கண்ணி வெடித் தாக்குதலில் 2 பொது மக்கள் உயிரிழந்தனர்.

-இப்படி கொழும்பில் பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்தது. (உ-எ)

## 1,000 ரூபாவைப் பெறத் தவறியோர் இன்று பெறலாம்

யாழ்ப்பாணம் டிச 11

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தோருக்கு ஆயிரம் ரூபா நிவாரணம் நேற்று வழங்கப்பட்டது.

நேற்று 800 குடும்பங்களைச் சேர்ந்தோர் நிவாரணப் பணத்தைப் பெற்றனர்.

தவறியவர்கள் இன்று வந்து பெற்றுக்கொள்ள [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## சூட்டுக் காயங்களுடன் சடலம்

முல்லைத்தீவு டிச 11

முல்லைத்தீவு செல்வபுரம் வீதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நபர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப் பட்டது.

இறந்தவர் வட்டுவாகல் வாசியான ஆழ்வாப்பிள்ளை நவநீதராசா (வயது 27) என பின்னர் அடையாளம் காணப் பட்டது (ஒ 92)

## கொள்கைகளை----

(1 ம் பக்க தொடர்ச்சி)

மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நீக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அமைச்சரவையில் ஆராயப்பட்டதாகத் தெரிவித்தார்.

மாகாண சபையின் முதலாவது உத்தியோக பூர்வ கூட்டம் எதிர் வரும் 15 ஆம் திகதி இடம் பெறும்

இந்தக் கூட்டம் ஈ பி ஆர் எல் எப் பின் கொள்கை விளக்கப் பிரகடனக் கூட்டமாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-உ)

## 31 ஆம் நினைவு நாள்

### அமரர் திரு. தி. தர்மராஜா

(Retired Officer Dept. of Education, Colombo)

மண்ணில்: 16 - 08 - 1929

விண்ணில்: 11 - 11 - 1988

அன்புள்ள எங்கள் ஆருயிர் அண்ணேவே! மச்சானே! பெரிய அப்பாவே! எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாய் எட்பொழுதும் எல்லோரையும் நிலைநாட்டிய எங்களது அன்புத் தெய்வமே! எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு, இமைப்பொழுதில் எங்களுக்குத் தெரியாமல் சென்று விட்டீர்களே! அண்ணா! பெரியப்பா! உங்கள் ஆத்மா சாந்தியடைய, மோட்ச ராச்சியம் கிட்ட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் இழப்பால் பரிதவிக்கும்:

அன்புச் சகோதரர்கள்: — மச்சாள்மார்:

தி. விக்னராஜா — சரஸ்வதி விக்னராஜா

தி. ரட்ணராஜா — கங்காதேவி ரட்ணராஜா

அன்பு என்றும் மறவா மக்கள்:

ராஜி, வசந்தி, சாந்தி, ரவி, ரஞ்ஞ பேபி, தம்பி (ரமேஸ்).

307, கச்சேரிநல்லூர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (8091)

## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்தம்பி பராபரன்

(பேராதனை பொறியியல் பீட இரண்டாம் வருட மாணவன்)

### நண்பா பராபரா!

நண்பர்கள் நாம் உன் பிரிவை
தாங்காது தவித்து நிற்க
கண்ணினை மூடி உனை அமைதி
கொள்ள வைத்தனரே
உன்னுடன் பழகிய அந்த
இனிய நாட்களைத்தான்
எம்மால் மீட்டுக்கொள்ள முடியுமாடா?
பேராதனையில் பட்டம் பெற
முயன்றிருக்கும் வேளையிலே
காலனவன் கொடூரமாய்
பரிதவிக்க அழைத்தானே!

தாங்கொணாத் துயரில் நின்று தவிக்கும்.

உனது நண்பர்கள்.
(பேராதனை பொறியியல் பீட மாணவர்கள்.)

(8106)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தெய்வானைப்பிள்ளை

கொள்ளுப்பிட்டி எட்வேட் ஒழுங்கையைச் சேர்ந்தவரும் புத்தூரில் வசிப்பவருமான திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்ஷனர் கந்தையாவின் அன்பு மனைவியும் லண்டனைச் சேர்ந்த சிவபாக்கியம் சிம்பாவே நடராசா, இராசேஸ்வரி, துரைசிங்கம் (கொழும்பு அங்கிள்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நாகமுத்து சிம்பாவே சந்திரசேகரம், சிதா, கொழும்பு திருமதி துரைசிங்கம் ஆகியோரின் மாமியாருமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் புத்தூர் கிந்துசிட்டி மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும்

வே. மகேந்திரன் (பேரன்)

புத்தூர் மேற்கு, புத்தூர். (8103)

செல்வன்

### அற்புதநாதன் - மயூரதீபன்

உரும்பராய் அற்புதநாதன் மயூரதீபன் அகால மரணமானார். இவர் இளைப்பாறிய இ. போ. ச காப்பாளர் அற்புதநாதன் (சிவா) பிரான்சு, யோகாம்பிகை ஆகியோரின் இளைய மகனும், பிரதீபன் (கண்ணன்), கங்காதீபன், பானுதீபன், துர்க்காயினி ஆகியோரின் சகோதரனுமாவார். இறுதிச் சடங்கு 10-12-88 சனிக்கிழமை உரும்பராயில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

— திருமதி யோ. அற்புதநாதன்

உரும்பராய்தெற்கு, உரும்பராய். (8257)

### சின்னத்தம்பி பராபரன்

(பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன்)

செல்வன் சின்னத்தம்பி பராபரன் அகால மரணமானார். இவர் மன்னார் கல்வி அதிகாரி (ஆங்கிலம்) திரு. சின்னத்தம்பி, திருமதி சின்னத்தம்பி (ஆசிரியை, சென். மேரிஸ் ம வி.) தம்பதிகளின் புதல்வரும், அன்பரசன், சிவசேயோன், சிவமதி, நிமலன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இவர் யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவரும், பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட 2 ஆம் வருட மாணவருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு காலை 9 மணியளவில் 66/1, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்:
Anparasan.

(8108)

## OBITUARY

### Mrs Rasamany Benjamin

Mrs Victoria Rasamany Benjamin beloved wife of Mr. M. Benjamin, loving mother of Zelina, Basil, Thilaga, Kamala, and Shanthi, mother-in-law of Dr R P Ariyanayagam, Dr. Mrs. Nirmala Benjamin, A. St. J. Segarajasinghe, Balendra Nagalingam. and Elmo Xavier; sister of late Mrs Chellam Segarajasinghe, Mrs Thangamany Varnakulasinghe Edwin Mariampillai and Mrs Matilda Abraham, expired on 8th December 1988. Burial on Monday, 12 12 88 at St. Mary's Burial Grounds. Cortege leaves residence 83 Main Street, Jaffna, at 9 a m. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 11 - 12 - 1988 இல் [illegible]
Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna, on Sunday 11th December 1988